பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 03 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பிரதமர் திரு நரேந்திர மோடி தாத்ரா நகர் ஹவேலி மற்றும் குஜராத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் இன்று பங்கேற்கிறார்.

2) இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயில் வரும் மே மாதம் இயக்கப்படும் என்று ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3) சாலை விபத்துகளைத் தடுக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

4) தொழிலாளர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

5) ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் நரேந்திர மோடி தாத்ரா நாகர் ஹவேலி மற்றும் குஜராத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

தாத்ரா நாகர் ஹவேலி - டாமன் டையூ ஆகிய செல்லும் அவர் சில்வாசாவில் 2 ஆயிரத்து 587 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

சில்வாசாவில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் அவர் உரையாற்றுகிறார். அதன் பின்னர் சூரத் செல்லும் பிரதமர், உணவுப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்று, 2 லட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

நாளை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நவ்சாரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் திரு நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளார்.

<<<<>>>>

மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் 56-வது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்தில் உள்ள **CISF** மண்டல பயிற்சி மையத்தில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பங்கேற்கிறார்.

குஜராத் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் இருந்து **CISF** வீரர்கள் பங்கேற்கும் சைக்கிள் பேரணியை அவர் காணொலி மூலம் தொடங்கி வைக்க உள்ளார்.

25 வீரர்கள் பங்கேற்கும் இந்தப் பேரணி, கடற்கரைப் பகுதிகளில் 6 ஆயிரத்து 200 கிலோ மீட்டர் பயணித்து கன்னியாகுமரியில் நிறைவடையும்.

தக்கோலத்தில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகனும் பங்கேற்கிறார்.

<<<<>>>>

சாலை விபத்துகளைத் தடுக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இரண்டு நாட்கள் நடைபெறும் உலகளாவிய சாலை உள்கட்டமைப்பு உச்சி மாநாடு மற்றும் கண்காட்சியை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் கடந்த ஆண்டில் 4 லட்சத்து 80 ஆயிரம் சாலை விபத்துகள் ஏற்பட்டதாகவும் இதில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் உயிரிழந்ததாகவும் கூறினார்.

சாலை விபத்துகளைத் தடுப்பதற்கான தீர்வுகளைக் கண்டறிவதில் அரசுடன் தொழில் துறையினர் ஒத்துழைத்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். வலுவான சட்ட அமலாக்கம் மற்றும் அவசர மருத்துவ சேவைகளின் அவசியத்தையும் திரு நிதின் கட்கரி எடுத்துரைத்தார்.

<<<<>>>>

இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயில் வரும் மே மாதம் இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், உலகின் சக்திவாய்ந்த ஹைட்ரஜன் ரயிலாக இது இருக்கும் என்றும், நவீன தொழில்நுட்பத் துறையில் இந்தியாவின் வளர்ச்சியை உணர்த்தும் வகையில் இது அமையும் என்றும் தெரிவித்தார்.

அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ரயில் எஞ்சின்களை இந்தியா வடிவமைத்து வருவதாகவும், இத்தகைய எஞ்சின்களை, வரும் ஆண்டுகளில் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

மக்களை திசை திருப்பும் வகையில் உணர்வு ரீதியாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் ஜனநாயகத்துக்கும் நல்லாட்சிக்கும் அச்சுறுத்தல்களாக மாறியுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்றும் இதன் இறையாண்மையை அனைவரும் மதித்து செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

<<<<>>>>

அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக தொழிலாளர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் தொழிலாளர் நலத்துறை மண்டல அலுவலக வளாகத்தை நேற்று அவர் திறந்து வைத்தார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதில் தொழிலாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று அவ் தெரித்தார்.

வருங்கால வைப்பு நிதி சேவைகளை மேம்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டியும் பங்கேற்றார்.

<<<<>>>>

நாட்டின் உயிரி பொருளாதாரம் கடந்த 10 ஆண்டுகளில் 10 மடங்கு அதிகரித்திருப்பதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

உயிரி தொழில் நுட்பம் தொடர்பாக ஜம்முவில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், 2014-ம் ஆண்டில் இதன் மதிப்பு 10 பில்லியன் டாலராக இருந்தது எனவும் 2024-ம் ஆண்டில் இது 130 பில்லியன் டாலராக அதிகரித்தது என்றும் தெரிவித்தார்.

2030-ம் ஆண்டுக்குள் இதனை 300 பில்லியன் டாலராக அதிகரிக்கும் இலக்குடன் அரசு செயல்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உயிரி தொழில்நுட்பப் புரட்சி நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

2013-14-ம் ஆண்டில் இத்துறைக்கு ஆயிரத்து 485 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாகவும் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில் இத்துறைக்கு 3 ஆயிரத்து 447 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரித்தார்.

<<<<>>>>

பிரசார் பாரதியின் தலைமைச் செயல் அதிகாரி திரு கௌரவ் திவேதி கஜகஸ்தானின் தகவல் ஒலிபரப்புத் துறை துணை அமைச்சர் திரு கனத் இஸ்காகோவை அஸ்தானாவில் நேற்று சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது, தில்லியில் மே மாதம் நடைபெறும் உலக ஒலி,ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு கஜகஸ்தான் அமைச்சருக்கு அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

வேவ்ஸ் எனப்படும் உலக ஒலி ஒளி மற்றும் பொழுது போக்கு உச்சி மாநாட்டையொட்டி ஹேக்கத்தான் போட்டி பல்வேறு பிரிவுகளில் நடத்தப்படுகிறது.

இதில் மருத்துவம் சார்ந்த மேம்பட்ட மெய்நிகர் தொழில்நுட்பம் சிக்கலான சிகிச்சைகளுக்கு பெரிதும் உதவும் என்று இந்த ஹேக்கத்தானின் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ள பாலசுப்பிரமணியன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு பார்படாஸ் நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

கோவிட் -19 பாதிப்புக் காலத்தில் இந்தியாவின் உதவிகளை அங்கீகரித்து இந்த விருதை பார்படாஸ் அரசு, திரு நரேந்திர மோடிக்கு வழங்கியுள்ளது.

பிரிட்ஜ்டவுனில் நடைபெற்ற விழாவில் பிரதமரின் சார்பில் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு பபித்ரா மார்கெரிட்டா பங்கேற்று இந்த விருதை பெற்றுக்கொண்டார்.

இந்த அங்கீகாரத்திற்காக பாரபடாஸ் அரசுக்கு திரு. பபித்ரா மார்கெரிட்டா நன்றி தெரிவித்தார்.

<<<<>>>>

ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-17 என்ற செட் கணக்கில் ஹாங்காங்கின் **Jason**-ஐ வென்றார்.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் அணி – ஹைதராபதை வென்றது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கொச்சியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கேரள அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

---------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

லக்னோவில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

---------------

குருகிராம் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Srivalli Rashmika Bhamidipaty – Vaidehi Chowdri** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட் கணக்கில் பெல்ஜியத்தின் **Clara** – ஜெர்மனியின் **Antonia** இணையை வென்றது.

-------------

மகளிர் முத்தரப்பு கிரிக்கெட் போட்டிகளுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கை – தென்னாப்பிரிக்கா ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் இப்போட்டி, இலங்கையில் ஏப்ரல் மாதம் 27ஆம் தேதி தொடங்கி மே 11ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>